# வெலிங்டன் ஏரிக்கரை பழுது பார்த்தலுக்கான உயர்மட்டக்குழுவின் கருத்துரு அரசுக்கு அளித்தது பற்றிய சிறு குறிப்பு

வெலிங்டன் ஏரிக்கரை கட்டப்பட்ட ஆண்டுகளிலிருந்து கரை பழுதடைந்து முழு நீர் கொள்ளளவு பிடிக்க முடியாமல் 11200 ஹெக்டேர் ஆயக்கட்டு முழுவதும் பயடையாமலே இருந்தது. பலமுறை கரை பழுது பார்க்கப்பட்டும் கரை அமிழ்ந்து முழு நீர் கொள்ளளவு பிடிக்க முடியாமல் இருந்து வந்தது. நிரந்தர தீர்வுகாண 2007 ஆம் ஆண்டு ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. தற்பொழுது உயர்மட்டக்குழு வெலிங்டன் ஏரி கரையை எவ்வாறு பழுது பார்க்கப்படவேண்டும் என்ற தொழில்நுட்ப கருத்துருவை அரசுக்கு 30.4.2008 அன்று வழங்கியுள்ளது. பல ஆண்டுகளாக தீர்வு காணப்படாமல் இருந்த வெலிங்டன் ஏரிக்கரை தற்பொழுது நிரந்தர தீர்வுவாக கரையைப் பலப்படுத்தி முழு நீர் கொள்ளளவு பிடிக்க கருத்துரு வழங்கப்பட்டுள்ளது. இதனால் திட்டக்குடி வட்டம், விருதாச்சலம் வட்டம் விவசாயிகள் மற்றும் 11200 ஹெக்டேர் பரப்பு பயனடைய வாய்ப்பு உள்ளது. உயர்மட்டக்குழுவின் கருத்துருவை பரிசீலித்து உடனடியாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி நடைபெற உள்ளது.